★ கரும்புலி தாக்குதலில் போர்க்கப்பல் சேதம்

விலை ரூபா 5-00


# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 23 இதழ் 278
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-11-1994


### வெற்றிலைக்கேணியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்) வெற்றிலைக்கேணி கடற்கரையில் கடற்கரும்புலிகள் நேற்று மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் கடற்படைக்குச்சொந்தமான படைகள் தரையிறக்கும் போர்க்கப் (6-ம் பக்கம் பார்க்க)

## கரும்புலி மேஜர் வித்தி வீரச்சாவு

(யாழ்ப்பாணம்) நேற்று அதிகாலை இடம்பெற்ற தரையிறக்கும் போர்க் கப்பல் மீதான தாக்குதலில், கடற் கரும்புலி மேஜர் வித்தி (2-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் ஷெல், குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்) தரையிறக்கும் போர்க்கப்பல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து நேற்று வடமராட்சி கிழக்கில் குடியிருப் (6-ம் பக்கம் பார்க்க)

# மூன்றுவது ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு இன்று நடைபெறும்

## முதலாவது பெண் ஜனாதிபதி விரைவில் பதவியேற்பு



[கொழும்பு]

இலங்கையின் 3வது ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் ஆளும் கட்சி சார்பிலும், எதிர்க்கட்சி சார்பிலும் பெண் அரசியல் பிரமுகர்களான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா, திருமதி ஸ்ரீமா திஸாநாயகா ஆகியோர் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். இவர்களுடன் மேலும் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தல் முடிவுகள் நாளை தெரியவரும். இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதி விரைவில் பதவியேற்பார்.

இன்று நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும். தேர்தல் அதிகாரிகள் தமது வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏற்கனவே போய்ச் சேர்ந்துள்ளனர். ஒரு லட்சம் அதிகாரிகள் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(6ம் பக்கம் பார்க்க)



## அமைதிப்பேச்சுக்கள் மீண்டும் தொடங்க வாய்ப்புள்ளது

(மணிலா)

திருமதி சந்திரிகா குமாரணதுங்க, இன்றைய ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில், விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர்வதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் அறிவித்தது.

தனது நேரடி போட்டியாளரான சிறிமா திசநாயக்கா போன்று தனது கணவரை இழந்த திருமதி சநதிரிகா மேற்கொண்டுள்ள புதிய திட்டங்கள், அமைதிப் பேச்சுவார்த்தை போன்றவையால், சந்திரிகாவிற்கு பெருமளவு (6ம் பக்கம் பார்க்க)

## பௌத்த சமாதானக் குழு யாழ். வருவதற்குத் திட்டம்

(கொழும்பு)

தேசிய பௌத்த சமாதான இயக்கத்தைச் சேர்ந்த குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தபின் இந்தக் குழு யாழ்.வரத் திட்டமிட்டுள்ளது. 1991ம் ஆண்டிலும் இந்தக் குழு யாழ்ப்பாணம் வந்தது தெரிந்ததே, சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சு (6-ம் பக்கம் பார்க்க)

அம்பாறை மாவட்டத்தில்

## இரு மீனவர்கள் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இரண்டு மீனவர்களை சிறிலங்கா பொலிஸ் அதிரடிப் படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

கடந்த 29ம் திகதி இரவு 11 மணியளவில் ஆலையடி வேம்பு வித்தியடி களப்பு என்ற இடத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இரண்டு மீனவர்களை மேற்படி அதிரடிப் (6-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## காமினி கொலைவிசாரணை விரைவில் பதில்கடிதம்

(கொழும்பு[

காமினி திஸாநாயக்காவின் கொலை சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கென இரு இந்திய நிபுணர்களின் உதவியை கோரி இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரால [6ம் பக்கம் பார்க்க]

# 'உரியநேரத்தில் அரசு யுத்த நிறுத்தம் செய்யும்'

## — அமைச்சர் அனுருத்த ரத்வத்த பேட்டி

(கொழும்பு)

''சமாதானப் பேச்சு வார்த்தை ஒன்று மேற்கொள்ளப்படும்போது யுத்த நிறுத்தம் ஒன்று அவசியமானது. உரிய நேரத்தில் யுத்தநிறுத்தம் குறித்து நாம் கவனம் செலுத்துவோம்'' இவ்வாறு பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் திரு. வசந்தராஜாவுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது; கடந்த 17 ஆண்டு காலமாகஆட்சியிலிருந்த முன்னள் அரசுதான் இந்த நாட்டை பிரிக்கும் விதத்தில் நடந்து கொண்டது. நாம்1977ல் இந்த நாட்டை ஐ. தே. க. விடம் ஒப்படைத்தபோது நாடு இந்த நிலை

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல்

# 1995

01. இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01 01-1995 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னல் 25-11-94 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விப் படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப்படிவக் கட்டணமான ரூபா 100/- உம் செலுத்துவதன் பேரில் 24-11-94 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகரசபையால் வழங்கப்படும். உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு 25-11-94ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்,

03. தபாலில் அனுப்பப்படும் பட்சத்தில் விநியோகத்தில் ஏற்படும் தாமதத்துக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

## அட்டவணை

| குத்தகை விபரம் | குத்தகை காலம் | கேள்விப்பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மாதவாடகை |
|---|---|---|---|---|
| 1. பெரிய கடை மரக்கறி சந்தை | 1 வருடம் | 5000.00 | 75000.00 | |
| 2. குருநகர் சந்தை | 1 வருடம் | 5000.00 | 125000.00 | |
| 3. செங்குந்தாசந்தை | 1 வருடம் | 5000.00 | 200000.00 | |
| 4. நாவாந்துறை சந். | 1 வருடம் | 2500.00 | 40000.00 | |
| 5. பாசையூர் சந்தை | 1 வருடம் | 2500.00 | 30000.00 | |
| 6. கொட்டடி சந்தை | 1 வருடம் | 500.00 | 1000.00 | |
| 7. அரியாலை சந்தை | 1 வருடம் | 1000.00 | 15000.00 | |
| 8. கொழும்புத். சந்தை | 1 வருடம் | 500.00 | 1100.00 | |
| **இறைச்சிக்கடைகள்** | | | | |
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடைகள் | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 5700.00 | 123.75 |
| ,, . 02 | 1 வருடம் | 2500.00 | 7500 00 | 112.50 |
| ,, . 03 | 1 வருடம | 2500.00 | 6200.00 | 112.50 |
| ,, . 05 | 1 வருடம் | 2500.00 | 16000.00 | 112.50 |
| ,, . 06 | 1 வருடம் | 2500.00 | 6000.00 | 112.50 |
| ,, . 07 | 1 வருடம் | 2500.00 | 5600.00 | 112.50 |
| ,, . 08 | 1 வருடம் | 2500.00 | 5700 00 | 112.50 |
| ,, . 11 | 1 வருடம் | 2500.00 | 5300.00 | 112.50 |
| 2. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 50100.00 | 195.00 |
| ,, . 02 | 1 வருடம் | 2500.00 | 22000.00 | 195.00 |
| ,, . 03 | 1 வருடம் | 2500.00 | 60000 00 | 195.00 |
| ,, . 04 | 1 வருடம் | 2500.00 | 25300.00 | 195.00 |
| ,, . 05 | 1 வருடம் | 2500.00 | 51350.00 | 195.00 |
| ,, . 06 | 1 வருடம் | 2500.00 | 50300.00 | 195.00 |
| குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| கடை இல. 07 | 1 வருடம் | 2500.00 | 14315.00 | 195.00 |
| 03. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 7175.00 | 200.00 |
| ,, . 02 | 1 வருடம் | 2500.00 | 6550.00 | 200.00 |
| ,, . 03 | 1 வருடம் | 2500.00 | 6000.00 | 200.00 |
| ,, . 04 | 1 வருடம் | 2500.00 | 5550 00 | 200.00 |
| ,, . 05 | 1 வருடம் | 2500.00 | 5250.00 | 200.00 |
| , . 06 | 1 வருடம் | 2500.00 | 7100.00 | 200.00 |
| ,, . 07 | 1 வருடம் | 2500.00 | 5150.00 | 200.00 |
| நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| ,, . 08 | 1 வருடம் | 2500.00 | 4175.00 | 200.00 |
| ., . 09 | 1 வருடம் | 2500·00 | 5300.00 | 200.00 |
| 04. பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 51000.00 | 135.00 |
| ,, . 03 | 1 வருடம் | 2500.00 | 50000.00 | 135.00 |
| 05. நரிக்குண்டு மா. இ. கடை | 1 வருடம் | 2500.00 | 63000,00 | 153.00 |
| 06. அரியாலை மா. இ. கடை | 1 வருடம் | 2500.00 | 16500.00 | 135.00 |
| 07. அரியாலை ஆ. இ. கடை | 1 வருடம் | 2500.00 | 10650.00 | 135.00 |
| 08. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 20000.00 | 112.50 |
| ,, . 02 | 1 வருடம் | 2500.00 | 8000.00 | 112.50 |
| 09. புங்கங்குளம் ஆ. இ. கடை | 1 வருடம் | 2500.00 | 10200.00 | 200,00 |
| புங்கங்குளம் மா. இ. கடை | 1 வருடம் | 2500.00 | 26000.00 | 200.00 |

05. இறைச்சிக்கடை, கோழிக்கடைகளுக்கான கேள்வியான மாதாந்த வாடகைக்கு யுறம்பாகக்கடையைக் குத்தகையாகப் பெறுவதற்கு கேட்கப்படும் கூடுதல் உரிமைப்பண அடிப்படையிலேயே அமையும். குறித்த உரிமைப்பணமானது எக்காலத்திலும் மீளளிக்கப்படமாட்டாததும் வாடகைக்கு எதிராக கணக்கு வைககப்படமாட்டாததும் சபையின் வருமானத்திற்குரியதுமாகும்.

06. சந்தைகளிற்கான சித்திபெற்ற கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஏழு நாட்களுக்கு கேள்வித்தொகையில் 1/3 பங்கை முற்பணமாகச் செலுத்த வேண்டும். குத்தகை தொகையின் மிகுதிப்பணத்தை மூன்று சம பங்குகளாகப் பிரித்துவரும் தொகையை முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30 ஆகிய தினங்களுக்கு முன்பாகச் செலுத்தி முடிக்கவேண்டும். குத்தகை சம்பந்தமான எதுவித கொடுப்பனவுகளுக்கும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

07. இறைச்சிக்கடை, கோழிக்கடைகளுக்கான சித்திபெற்ற கேள்விக்காரர் அவரது கேள்விஏற்றுச்கொண்டமைபற்றி அறிவிக்கப்பட்ட இருவார காலத்தினுள் அவரால் குறிப்பிட்ட உரிமைப்பணம் முழுவதையும் மூன்றுமாத வாடகை முற்பணத்தையும் 1994ம் ஆண்டுக்கான உரிமைக்கட்டணத்தையும் செலுத்தி உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

08. சந்தைக்கட்டண அறவீடுகள் யாழ்ப்பாண மாநகர சபையால் விதிக்கப்பட்ட அல்லது விதிக்கப்படும் வீதத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

09. மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாதகேள்விப் படிவங்களை முறையாகப் பூரணப்படுத்தாத கேள்விக்காரரின் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

10. ஏற்கனவே இச்சபையில் மேற்குறிப்பிடப்பட்ட குத்தகைகளை ஏற்றுகுத்தகைப்பணம்முழுவதையும் செலுத்தத்தவறியவர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது,

11. இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட எந்தவொரு குத்தகைக்காவும், சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்வியையும் எதுவித காரணமும் காட்டாது கேள்விகள் திறப்பதை நிறுத்திவைக்கவோ, ஒத்திவைக்கவோ அல்லது திறக்கப்பட்ட எந்தவொரு கேள்வியையும் அல்லது கேள்விகள் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை எதுவித காரணமும் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ மாநகரசபை ஆணையாளருக்கு பூரண உரிமையுண்டு.

12. 25-11-94ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

13. இக்கேள்விகள் சம்பந்தமாக மேலதிக விபரங்களை மாநகரசபையின் நானுவித இறைவரிப்பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்,

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1994-11-07

எ-4489

---

### வரி விளம்பரம்

**11-11-94**
**வியாழ மாற்றம்**

எங்கும் விற்பனையாகின்றது. ரூபா 10/- (எல்லா ராசிகளின் பலன்கள்) பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (நூலாசிரியர்-சத்யா) கட்டுடை.

(சி-1302)

**யாருடையது**

வண்ணை சிவன் கோவிலில் நேற்று (8-11-94) நடைபெற்ற 'சூரன் போர்' வைபவத்தில் பக்தர் ஒருவரின் கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியுவர் தகுந்த ஆதாரங்களை காட்டி பின் வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளவம். வசந்தி மாலா, 1005, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பணம்.

(சி-1306)

### யமசங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் மயிலணி, திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில் யமசங்கார உற்சவம் இம்மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். மாலை 3-30 மணிக்கு ஸ்ரீ விஸ்வநாதப் பெருமான் யமசங்காரம் செய்ய எழுந்தருளுவார்.

### மாவீரர் நாள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 3-00 மணிக்கு பருத்தித்துறை மெதடிஷ்ட் பெண்கள் உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது. -ரி

0 0

(யாழ்ப்பாணம்)

மாவீரர்நாள் தொடர்பாக ஒலி, ஒளி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10-00 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதால் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒலி ஒளி உரிமையாளர்களையும தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது

### கரும்புலி மேஜர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(சந்தனம் யோகேஸ்வரன்-குடாரப்பு, நாகர்கோவில்) வீரச் சாவு அடைந்தார்.

வெடிப் பொருட்கள் ஏற்றிய படகில் ஊடுவிச் சென்று கப்பலின் மீது இவர் மோதினார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

(ரி)

# நாட்டில் படுகொலைகள் நடக்கும்போதெல்லாம் அரசியலிலிருந்து ஒதுங்குமாறு பிள்ளைகள் கூறுவர்

## — சந்திரிகா பேட்டி

(கொழும்பு)

''தமிழ் மக்கள் மத்திய அரசாங்கத்தில் முழுநம்பிக்கையையும் இழந்துவிட்டனர். ஆகவே இப்போதுநாம் இணைப்பு பாலம் அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளோம்.''

இவ்வாறு சந்திரிகா குமாரணதுங்க சண்டே ஒப்சேவருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு கூடிய சலுகைகளை நீங்கள் வழங்கியிருப்பதாக கருதப்படுகிறது, அதுபற்றி கூறும்படி கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது;

நாங்கள் இப்போது வட பகுதி மக்களின் நன்மைகருதி ஒரு சில பொருட்களின் தடையை விலக்கியுள்ளோம். பாதுகாப்பு அதிகாரிகள் கூறிய புத்திமதிகளுக்குக்கிணங்க சில வற்றை இன்னும் விலக்கவில்லை. புலிகள் தங்களுக்குத் தேவையான பொருட்களை எப்படியும் பெற்றுக்கொள்கிறார்கள். பொதுமக்களே பாதிப்புறுகின்றனர். அவர்களுக்கு தேவையானதை வழங்க வேண்டியது எமது கடமையாகும்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் நல்லெண்ணங்களில் முன்னைய அரசு கறைபடிய வைத்துவிட்டது. இதனால் அவர்களுடன் நல்லெண்ணம் ஏற்படுத்தவும் ஏதும்செய்துகொள்ளவும்அநேகம் செய்யவேண்டியுள்ளது.

சில பொருட்கள் மீதான தடையை நீக்கி, மட்டுப்படுத்தப்பட்ட நல்லெண்ணத்தையே காட்டினோம். புலிகளும் 10 சிங்களக் கைதிகளை விடுதலைசெய்து அதற்கு மதிப்பளித்தனர்.

நாங்கள் விடுதலைப் புலிகளுடன் பேசமுன்னர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் முதலில் கலந்தாலோசித்தோம். போரைதொடர்வது பற்றியும் சமாதான முயற்சிபற்றியும் அவர்களின் கருத்தினை கேட்டறிந்தோம்.

விடுதலைப் புலிகள் தமிழ் ஈழம் கேட்டனர். நாம் அதற்கு இல்லையெனக்கூறி கூடுதலான அதிகாரம் வழங்க முன்வந்தோம். அவர்கள் அதற்கு உடன்பட்டுவந்தால் ஒழிய, நாங்கள் என்ன அதிகாரம் வழங்குவோம் என்பது பற்றிய விபரமும் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

புலிகள், ஈழம் என்பதை ஒரு கரையில் வைத்துவிட்டு, உண்மையான அதிகார பங்கீடு பற்றி ஆலோசிப்பதாக தகவல் சாதனங்கள் மூலம் தெரிவித்துள்ளனர். இது நம்பிக்கை தரக்கூடியதாகவுள்ளது. ஆகவே இனி நாம் விரிவாக பேசலாம்.

ஜனாதிபதி தேர்தலில் கடுமையான போட்டியையே நான் எதிர்பார்த்திருந்தேன், அதுவே உண்மை ஜனநாயகம் ஆனால் திரு. காமினி திசநாயக்காவின் மறைவையடுத்து இப்போது அப்படியான சூழ்நிலை இல்லை. இது எனக்கு கவலையளிக்கிறது.

நான் அதிகார ஆசை பிடித்தவள் அல்ல இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனக்குச் சொந்த அரசியல் அபிலாசை இல்லை என்று சொன்னது உண்மை. இப்போதும் அப்படித்தான். ஆனால் நான் அரசியலில் காலடிஎடுத்துவைத்து முதலாவது போட்டியிலேயே தென் மாகாண சபை தேர்தல் போட்டியில் நான் எங்கே இருக்கிறேன் என்று எனக்கே தெரியாதளவுக்கு துரிதமாக உயர்த்தப்பட்டு முதல் மந்திரியானேன். பின் பிரதம மந்திரியானேன்.

இப்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி பதவியையும் ஏற்கும் நிலையிலுள்ளேன். ஆனால் எமது கொள்கை திட்டப்படி சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வதே முடிவாகும். அதற்காக சர்வ வல்லமை கொண்ட பிரதம மந்திரி முறையையும் கொண்டுவர மாட்டோம். ஜனநாயக முறைப்படி கொள்கை தீர்மானம் எடுப்பதில் மக்களின் அரசாங்கம் அதனை செய்யும்.

நான் சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகளுடன் இறங்குவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு, நாட்டிலுள்ள பெரும்பாலான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் சமாதானத்தையே விரும்புவது ஒரு காரணம். இரண்டாவது நான் சிறு வயதிலிருந்தே பல்வேறு வன்செயல்களைக் கண்டு அச்சமடைந்துள்ளேன். அதிலும் மேலாக தனிப்பட்ட அரசியல் வன்செயலுக்கு பல முறை நான் பாதிப்புக்குள்ளானேன். இதன் காரணமாகவும் நான் சமாதானம் விரும்புவதற்கு ஏதுவாகவுள்ளது.

எங்கும் சரி ஒரு படுகொலை அதாவது லலித் அத்துலத்முதலி காமினி போன்றோரின் கொலை நடந்ததும் எனது பிள்ளைகள் பயப்படுகிறார்கள் என்னை அரசியலிலிருந்து வெளியேறுமாறு வற்புறுத்துகிறார்கள். இதனால் நான் குற்றமனதுடன் காணப்படுகிறேன். இதனால் அவர்களையும் அரசியலில் ஈடுபடாமல் இருக்கப் பார்த்துக் கொண்டு வருகிறேன், எங்கள் மூன்றாம் தலைமுறையிலும் எமது குடும்பத்தில் அரசியல் தலைவர் ஒருவர் தோன்றுவார் என்று நான் எண்ணவில்லை என்றார்.

-கே-சி

# தொண்டமானுக்கு பதவி; பல அமைச்சர்கள் அதிருப்தி

(கொழும்பு)

தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்கியமை தற்போதைய பொ. ச. மு. அமைச்சர்கள் பலருக்கும் அதிருப்தியையே ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலுக்கு இது சரியெனவும் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்ததும் அமைச்சர்களின் எண்ணிக்கை கூடுவதால் அவர்களைக் கட்டுப்படுத்துவதில் பிரச்னை எழலாம் எனவும் கருதப்படுகிறதாம்.

தொண்டமானை அமைச்சராக்குவது என பிரதமர் சந்திரிகா முடிவெடுத்ததும் அவருக்கு எந்த அமைச்சரவையை ஒதுக்குவது என்ற சிக்கல் எழுந்ததாம். இது பற்றி திரு. தொண்டமானுடன் பிரதமர் கலந்துரையாடியபோது தனக்கு முன்னைய அமைச்சர் பதவியையே (சுற்றுலாத்துறை) வழங்குமாறு தொண்டமான் கோரினார்.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவும் இந்தத் துறையை விட்டுக் கொடுக்க சம்மதித்ததால் தொண்டமானுக்கு சுற்றுலாதுறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. எனினும் தொண்டமான் எதிர் வரும் காலத்தில் அரசுடன் பேரம் பேச முயல்வார் என அமைச்சர்கள் கருதுகிறார்களாம்.

(சி)

# ஓ. எல். சான்றிதழை சந்திரிகா சமர்ப்பிப்பாரா?

## — ஹட்சன் சவால் —

(கொழும்பு)

திருமதி சந்திரிகா தனது க பொ. த. [சாதாரணதர] சான்றிதழை சமர்ப்பிப்பாராயின் தான் ஜனாதிபதி தேர்தலில் இருந்து வாபஸ் பெற தயார் என திரு. ஹட்சன் சமரசிங்க கொழும்பு மத்தியில் தேர்தல் பிரசாரத்தின்போது சவால் விடுத்தார்.

திருமதி சந்திரிகா பிரான்ஸ் சென்று பல்கலைக்கழகத்தில் சிறப்பு பட்டதாரியாக வெளிவந்திருக்கையில், இவரினது கருத்து கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இதேவேளை, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன கருத்துப்படி, தான் விடுதலைப் புலிகளை எதிர்த்து பேச முடியாதுள்ளதாகவும், அவர்கள் விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசவா விரும்புகிறார்கள் என்றும் அக்கூட்டத்தில் திரு. சமரசிங்க கேள்வி எழுப்பினர்.

கே-சி

## கோழிகள் திருட்டு

(அரியாலை)

யாழ். அருச்சுனு வீதி இராசாவின்தோட்ட சந்தியில் கடந்த 6ம் திகதி இரவு ஒரு வீட்டில் திருடர் பின்புறமாக வந்து கோழிக் கூட்டிலுள்ள பல கோழிகளைத் திருடிச் சென்றதாகத் தெரிய வருகின்றது. (59)

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகள் மூலம் 1994 புரட்டாதி மாத முதல் இருவாரத்திற்குரிய இலவச உலர் உணவு விநியோகம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இவ் விநியோகத்தினை எதிர்வரும் 15ம் திகதிக்கு முன்னர் பாவனையாளர்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்கொலையாளியின் தலையை

## ரூபவாஹினி ஏன் காட்டவில்லை?

(கொழும்பு)

காமினியைக் கொன்றதாக கருதப்படும் பெண் தற்கொலையாளியின் படத்தை ரூபவாஹினியோ, சுயாதீன தொலைக் காட்சி சேவை (ஐ. ரி. என்) யோ ஒளிபரப்பாதது தமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளதாக காமினியின் மைத்துனரான திரு. விக்கிரம வீரசூரியா 'சண்டே ஐலன்ட்' றக்குத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்: சி. ஐ. டி. பொலிஸாரின் விசாரணைகள் விடுதலைப் புலிகளையே குறிவைத்துள்ளது. இதைவிட வேறு தடயங்களோ அல்லது சந்தேகங்களோ இல்லை. இதில் புலிகளைவிட வேறு எவரும் இல்லை என்றே விசாரணைகள் கருதுகின்றன.

தற்கொலைப் பெண் எனக் கருதப்படும் பெண்ணின் படத்தை ஐலன்ட் பத்திரிகை பிரசுரித்த போதிலும் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள தொலைக் காட்சிகள் இதனை ஒளிபரப்பவில்லை. இப்பெண்ணினதும் இவருக்கு அருகிலிருந்த பெண்ணினதும் அடையாளங்கள் வீடியோ ஒளிப்பதிவில் தெரிய வந்துள்ளன. தற்கொலைப் பெண்ணுக்கு அருகிலிருந்த பெண் தற்போது தலைமறைவாகிவிட்டார்.

புலிகள்தான் இதனை செய்தார்கள் என்பதிலிருந்து பொ. ச. மு. அரசு தப்ப முடியாது என்றும் கூறியுள்ளார்.

(சி)

## மலேரியா பரவுகிறது

(கொழும்புத்துறை)

அரியாலை டயஸ் குடியிருப்பில் தற்போது சிறுவர்கள் உட்பட மக்களிடையே காய்ச்சல், தடிமன், மலேரியா பரவி வருகின்றது. முன்பு ஒரு சிலரிடையே காணப்பட்ட காய்ச்சல் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து பலரிடையே பரவியுள்ளாக தெரிவிக்கப்படுகிறது. -154

## மரித்தோருக்காக வழிபாடு

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கத்தோலிக்க இல்லங்களிலும் இம்மாத ஆரம்பத்திலிருந்து 30ந் திகதி வரை செபமாலை மரித்த விசுவாசிகளுக்கானபிரார்த்தனை ஆகிய வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. -59

ஜனாதிபதி தேர்தலின் பின்

# ரணில் - காமினி கோஷ்டிகள் கடும் மோதலில் இறங்கும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் ஐ.தே.கவினுள் ரணில் கோஷ்டிக்கும் காமினி கோஷ்டிக்குமிடையில் வெளிப்படையாகவே பெரும் மோதல்கள் எழலாமென அவதானிகள் கருதுவதாக 'சண்டே ஐலன்ட்' தெரிவித்துள்ளது.

இன்றைய தேர்தலுடன் ஜனாதிபதி விஜயதுங்கா அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளதால் அதன்பின் கட்சித் தலைமை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்காவிடம் சென்றுவிடும். இதன்பின் அவரது கை கட்சியில் ஓங்கிவிடும்.

தேர்தல் பிரசாரங்களில் திரு. ரணில் விக்கிரமசிங்கா சிறிமா திஸநாயக்காவுக்காக அவருடன் சேர்ந்து பிரசாரம் செய்வதுபோல் ஏன் காமினி உயிருடன் இருந்தபோது அவருடன் இணைந்து பிரசாரம் செய்யவில்லை என்ற கேள்வி கட்சி வட்டாரங்களில் எழுந்துள்ளதாம்.

முன்னர் காமினிச்காக பிரசாரம் செய்த ரணில் காமினி கூட்டத்திற்கு வரமுன்பே தனது உரையை முடித்துக் கொண்டு சென்றுவிடுவாராம். கிராண்பாஸ் குண்டுவெடிப்பு தினத்தன்றும் திரு. ரணில் தனது உரையை முடித்துக் கொண்டு காமினி கூட்டத்திற்கு வரமுன்பே சென்றுவிட்டாராம். -சி

## தடுப்பூசி போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கோழி வளர்ப்பை மேம்படுத்தும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால்கடந்த மாதம் 58,795 கோழிகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன.

கால்நடை வைத்தியர்களின் உதவியுடன் கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கைகள் மூலம் யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெருமளவிலான கோழிவளர்ப்பாளர்கள் நன்மையடைந்துள்ளனர்.

## 150 அரச ஊழியருக்கு ஒரு கோடி ரூபா நட்டஈடு

[கொழும்பு]

வன்செயல்களில் பாதிக்கப்பட்ட 150 அரச ஊழியர்களுக்குஒருகோடிரூபா நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. இதற்கான காசோலைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் கப்பல் துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் விடுத்த பணிப்புரைக்கு இணங்கவே இந்த நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ரி)

# புலிகள் தலைவர் பிரபாவுடன் எனக்கு தொடர்பு கிடையாது

## வசந்தராஜா கூறுகிறார்

(கொழும்பு)

''விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் எனக்கும் எந்த ஒரு உறவுமுறையும் கிடையாது நான் இதுவரை அவரை சந்திக்கவில்லை. யாழ்ப்பாணம் சென்றபோது கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை மட்டுமே சந்தித்தேன்.''

இவ்வாறு ரூபவாஹினியின் புதிய தலைவர் திரு. பி. வசந்தராஜா கொழும்பு பத்திரிகைக்கு அளித்தபேட்டியில் கூறினார். அவர் தனது பேட்டியில் மேலும் கூறுகையில்:

கடந்த யூன் மாதம் பி. பி. ஸி.யின் சார்பில் யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்பு தற்போதைய பிரதமர் திருமதி சந்திரிகாவை சந்தித்தேன், 'தான் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகளுடன் நடாத்துவதற்கு தயாராக இருப்தாக புலிகளிடம் கூறும்படி கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் அப்போதைய பிரதமர் ரணிலையும், ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவையும் சந்திக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

இனப்பிரச்னையை தீர்த்து வைக்கவேண்டும் என்ற ஒரே சிந்தனையில் இருப்பவர் இன்றைய பிரதமர் திருமதி சந்திரிகாதான். காமினியின் மரணத்தினால் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுதற்காலிகமானது தான் இதனால் நாம் ஒருபோதும் தளர்ந்துவிடக்கூடாது.

வடககு-கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தம் அர்த்தமற்றதொன்றாகும். நாடு பிரிவதை தடுப்பதற்காக யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் இந்த யுத்தத்தினால் தற்போது நாடு பிரிக்கப்பட்டது போன்ற நிலைக்கு நாம் வந்துவிட்டோம்

இவ்வளவுகாலமும் ரூபவாஹினியில் தமிழ்-முஸ்லீம் நிகழ்ச்சிகளுக்கு பாரபட்சம் காட்டப்பட்டு வந்தது; இதை இனிமேல் நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் தமிழ்-முஸ்லீம் நிகழ்ச்சிகளுக்கு ரூபவாஹினியில் பிறிதொரு அலைவரிசையை ஆரம்பிப்பதற்கான முயற்சியை தற்போது செய்துவருகின்றேன்.

எனது தந்தையார் டாக்டர் பரமேஸ்வரன் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். எனது தாயார் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர். அவர் நன்றாகத் தமிழ் பேசக்கூடியவர் எனக்கும் ஓரளவு தமிழ்மொழிபேச முடியும் ஆனால் எழுதவோ, வாசிக்கவோ தெரியாததையிட்டு தற்போது வெட்கமும் வேதனையும் அடைகின்றேன், என்றும் கூறினார். -வி-சி

# தற்கொலைப் பெண்ணுக்கு ஐ.தே.கவுடன் தொடர்பு?

(கொழும்பு)

பாலத்துறைக் குண்டு வெடிப்பு சம்பந்தமாக சந்தேகிக்கப்படும் பெண் ஐக்கிய தேசியக்கட்சியோடு சம்பந்தப்பட்டவர் என்றும், இவர் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் பிரேமச்சந்திரா குழுவினருக்கு நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்றும் 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சொலிசார் விசாரணை நடாத்தி வருவதாகவும் இதன்மூலம் தகவல் ஏதும் கிடைக்கலாமெனவும் பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

தற்கொலைப் பெண் பற்றி செய்திகள் வந்தபோதும் இதுவரை அவர் யார் என்பது பற்றி எதுவும் தெரியவரவில்லையாம். -ம-சி

### நூலகசேவை

(கொழும்புத்துறை)

யாழ். போதனா வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கான இரவல் வழங்கும் நூலகசேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது. -154

# சட்டத்திலுள்ள குறையால் தொண்டா அமைச்சரானார்

(கொழும்பு)

''சட்டத்திலுள்ள சில குறைபாடுகளைப் பயன்படுத்தி திரு. தொண்டமான் பொதுசன முன்னணியில் இணைந்து அமைச்சர் பதவியும் பெற்றுள்ளார். ஐ. தே, க அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்த போதும் இறுதித் தீர்மானம் உயர் நீதிமன்றத்தினால் தான் தீர்மானிக்கப்படும்.'

இவ்வாறு ஐ. தே. க பொது செயலர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்: திரு. தொண்டமான் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்துகொண்டதால் சட்டம் பற்றிய கருத்துவேறுபாடுகள் சட்டவல்லுநரிடையே ஏற்பட்டுள்ளது,

தற்போதைய முறையின் கீழ் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு கட்சியிலிருந்து வேறொரு கட்சிக்கு மாறும் போது அவரது உறுப்புரிமை இழக்கப்படும். ஆனால் திரு. தொண்டமான் இ. தொ. கா உறுப்பினராகவுள்ளதால் ஐ. தே, கட்சி அவரை கட்சியிலிருந்து விலக்கும் நடவடிக்கை எடுக்க இயலாதுள்ளது. இந்தசட்டத்தில்காணப்படும் குறையை திரு. தொண்டமான் பயன்படுத்தக்கூடியதாயுள்ளதாக சட்ட வல்லுநர் ரோகன் எதிரிசிங்க 'சண்டே ரைம்சுக்கு' தெரிவித்துள்ளார். (கே-சி))

### சீமெந்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், அங்கத்தவர்களுக்கு திருவுளச்சீட்டு மூலம் சீமெந்து விநியோகம் செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

சீமெந்து பெற விண்ணப்பிக்கும் அங்கத்தவர்கள் திருவுளச்சீட்டு மூலம் தெரிவுசெய்யப்பட்டு ஒரு பைக்கற் சீமெந்து 650/-விற்கு விநியோகிக்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாளை 10ம் திகதிக்குமுன் தமக்குரிய சீமெந்தினை பெற வேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர். (ரி)

# வடக்கில் விமான ஓடுபாதை புலிகள் அமைக்கின்றனர்

## பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

வடபகுதியில் பழுதடைந்திருக்கும் வீதிகளை திருத்துவதற்கு தார் வழங்குமாறு யாழ். அரச அதிபரால் விடுக்கப்பட்ட கோரிக்கை பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டினால் நிறைவேற்றப்படவில்லையாம்.

விடுதலைப்புலிகள் விமான ஒடுபாதை ஒன்றை அமைத்து வருவதாகவும் இதற்குத் தார் பயன்படுத்தப்படும் என்பதால் தார் வழங்கப்படக்கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு போக்குவரத்து அமைச்சிடம் ஆலோசனை கூறியுள்ளதாம்.

அத்துடன் புலிகள் விமான ஒடுபாதை ஒன்றைத் தயார் செய்து வருகிறார்களா என்பது குறித்து விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்கப்பட்டுள்ளாராம். (சி)

# சந்திரிகாவை தோற்கடிக்குமாறு படையினர் கூறுகின்றனர்

(மட்டக்களப்பு)

கிழக்கில் பல பகுதிகளிலும் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகாவை தோற்கடிக்குமாறு படையினர் தமிழ்-முஸ்லிம் மக்களுக்குக் கூறிவருகிறார்களாம்.

சுற்றிவளைப்புகள், தேடுதல்களை நடாத்தும் படையினரும் சமூக முக்கியஸ்தர்களை முகாம்களுக்கு அழைக்கும் படை அதிகாரிகளும் சந்திரிகாவுக்கு எதிராகவே வாக்களிக்குமாறு கூறியுள்ளனராம்.

யுத்தத்தை தொடர விரும்பும் படையினரும் அரசு-புலிகளுடன் பேசுவதை எதிர்க்கும் படையினருமே இவ்வாறு கூறி வருவதாகக் கருதப்படுகிறது. படையினரின் இந்தப பிரசாரம் கிழக்கில் மக்கள் மத்தியில் அதிருப்தியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதாம்.

இதேவேளை திருமதி சந்திரிகாவுககு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்த தமிழ்குழுக்களுக்கும் படையினருக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# விடுதலைப் புலிகள் 800 பேர் கிழக்கிற்குள் ஊடுருவலாம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திற்குள் 600 முதல் 800 வரையான புலிகள் ஊடுருவியுள்ளதாக புலனாய்வுதுறையினர் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து கிழக்கில் சகல படைமுகாம்களும்உசார் படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேற்படி 800 புலிகளும்முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளிலிருந்தே கிழக்கிற்குள் ஊடுருவியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிழக்கில் விடுதலைப்புலிகள் லொறி மற்றும் கார் பற்றறிகளை கடத்திச் சென்றுள்ளதாகவும் இவற்றை பயன்படுத்தி புலிகள் கண்ணிவெடித்தாக்குதல்களை நடாத்த முயல்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் காமினியின்கொலையின் பின்னர் இராணுவமோ புலிகளோ இது வரை ஒருவர் மீது ஒருவர் கடும் தாக்குதலை நடாத்தியதாக தெரியவரவில்லை என்றும் படை வட்டாரங்கள் கூறியுள்ளன. -சி

# தபால் ஊழியர் சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் சம்பளம் 20 சத வீதத்தினால் அதிகரிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பள அதிகரிப்பு 1992ம் ஆண்டு மே மாதம் முதல் அமுலுக்கு வந்துள்ளதென்றும் சம்பளஅதிகரிப்பின் நிலுவைகள் தொகுதி தொகுதியாக வழங்கப்படுமென்றும் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சு அறிவித்துள்ளது.

ச்சம்பள அதிகரிப்பினால் 23 ஆயிரம் தபால் ஊழியர் நன்மையடைவார்கள். வி-இ

# சமாதான முயற்சியை கைவிடுவது நல்லதல்ல!

## — அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

நாட்டில் தற்போது உருவாகியுள்ள நிலைமை காரணமாக சமாதானப்பேச்சுவார்த்தைகளைக் கைவிடுவது புத்திசாலித்தனமான செயலாகாது வெளிவிவகார வர்த்தக சட்டத்துறை அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்களின் படுகொலைகளுக்கு மத்தியில் இந்த நாட்டின் மக்கள் இன்று வீழ்ந்திருக்கும் மனநிலையை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

மக்களின் நிலையை உணர்ந்து நாம் எப்படியும் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடர வேண்டும். அப்போது தான் நாம் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கமுடியும்.

இந்த இக்கட்டான நிலையிலும் பொதுசன ஐக்கிய முன்னணி சமானத்தையே அதன் குறிக்கோளாகக் கொண்டுள்ளதுஎன்று அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில் கொலை விசாரணை முடிவுகள் வரும் வரையில் காத்திருக்காது சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசு உடன் ஆரம்பிக்க வேண்டுமென தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். - இ

# வாய்ச் சண்டை வாள்வெட்டில் முடிந்தது

(வட்டுக்கோட்டை)

பொன்னாலைப் பகுதியில் இரு கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற வாய்ச்சண்டை வாள் வெட்டில் முடிந்தது.

கடந்த வியாழக்கிழமை பொன்னாலைப்பகுதியில் நண்பர்கள் இருவருக்கிடையே நடைபெற்ற வாய்ச்சண்டையை அடுத்து உறவினர்களும் கலந்து கொண்டதால் ஒருவருடைய கை முறிக்கப்பட்டதாகவும் பின்னர் கை முறிந்தவருடைய நண்பர்கள் சேர்ந்து மற்றவரை வாளால் வெட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சண்டை கோஷ்டிச் சண்டையாக மாறி இப்பகுதியை பெரும் பரபரப்பில் ஆழ்த்தியுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. - 139

### மூக்குக் கண்ணாடி

(கொழும்புத்துறை)

அண்மையில் கொண்டாடப்பட்ட சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள முப்பது முதியோர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளை இலவசமாக வழங்கினர். -154

### கலைவிழா நிகழ்வுகள்

(உடுவில்)

யாழ்ப்பாண கல்வி வலயம் இரண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்வி கலாசார விளையாட்டு அபிவிருத்தி சபையினர் எதிர்வரும் 17ம் திகதி தமது முதல் கலைவிழா நிகழ்வினை நடாத்தவுள்ளனர்.

இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள இக்கலைவிழாவில் இயல், இசை, நாடகம் போன்ற கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பிரதி போயா தினத்திலும் கலைநிகழ்வுகளை தொடர்ந்து நடாத்த மேற்படி சபையினர் முடிவு செய்துள்ளனர். -109

### மணிவாக்கு

வாழ்க்கை என்பது குறிஞ்சித்தோலின் இனிமை, முல்லைப் பாலின் சுவை, மருத நிலத்தின் வளம், நெய்தலின் உழைப்பு, பாலையின் சகிப்புத்தன்மை ஆகியவை சேர்த்து அமைவதுதான்.

- தொல்காப்பியர்

## நமது நோக்கு

### ஜனாதிபதித் தேர்தல்!

இன்று - இலங்கையில்- ஜனாதிபதித் தேர்தல்நடைபெற இருக்கிறது. அனுதாப அலை, சமாதான அலை, வன்முறை அலை, இனவாத அலை போன்ற அலைகள் கலந்து வீசும் காட்சியையும் நாடு கண்டது.

இந்தப் பல்வேறு அலைகளால், மக்களின் உண்மையான, தீர்க்கமான முடிவுகளை தேர்தல் பிரதிபலிக்குமா. என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

அத்தோடு - பயறுமுக்தலகளும் தாராளமாகிவிட்டன.

''சிந்தித்து வாக்களிக்சாதுவிடில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்க முடியாது!'' எனச் சிறிமா திசநாயக்கா விடுத்த எச்சரிக்கை யாருக்கு? ஏன்?

இனக்கலவரங்கள் பலவற்றைச் சந்தித்த, தென்னிலங்கையில் வாழுகின்ற சிறுபான்மையினருக்கு விடுத்த எச்சரிக்கையாகவும் சிலர் கருதக்கூடும்.

முன்பும் இதுபோன்ற எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

வழக்கமாகவே - ஐ. தே. க.வினர் பயமுறுத்தல்களிலும், வன்முறைகளிலும், இராணுவத் தீர்விலும் நம்பிக்கை வைத்தவர்கள் என்பதையும், ஜனநாயக மரபுகள்பற்றி அதிகம் அக்கறை கொள்ளாதவர்கள் என்பதையும் இது காட்டவில்லையா?

இதேபோன்று - இனக்குரோதப் பிரசாரத்திலும் பூமிபுத்திர போன்ற கட்சிகள் ஈடுபட்டதாகத்தெரிய வருகிறது.

பொட்டு வைக்காத தமிழர் எனச் சந்திரிகாவை வர்ணித்ததும், பின்னர் பொட்டு வைத்த சந்திரிகாவின் படங்களை ஒட்டியதும், ஜனநாயக வளர்ச்சிக்கான நடவடிக்கைகளா?

தேர்தல் சட்ட விதிகள் மேலும் இறுக்கமாக்கப்பட வேண்டுமென்பதையும், மக்கள் அச்சமின்றித் தமது கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட வேண்டும்.

இதேவேளை - கருத்துக் கணிப்பு ஒன்றில் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதை வெளிக்காட்டியது, இருட்டில் ஒரு ஒளியாகத் தெரிகிறது.

அத்தோடு - வழக்கமாக இன, மத அலைகளுக்குத் தூபமிடும் சில மதவாதிகள் மௌனமாக இருப்பதும் நல்ல அறிகுறியே.

பொருளாதாரச் சீரழிவுகள், வன்முறைகள் ஆகியவற்றால் அலையுண்ட தென்பகுதி மக்களின் தீர்ப்பு எப்படி இருக்கப் போகின்றது என்பதை உலகம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

# இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தேசிய அரசாங்கம் அமைப்பேன்

## — சிறிமா திஸநாயக்கா பேட்டி

(கொழும்பு)

ஜனாதிபதிதேர்தலில் வெற்றி பெற்றால் இனப்பிரச்சினையை தீர்க்கும் வரையாவது தேசிய அரசொன்றை அமைப்பேன் என ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் திருமதி சிறிமா திஸநாயக்கா 'சன்டே ரைம்ஸ்' க்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இனப்பிரச்சினைக்கு தீர்வுவரும் வரையில் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்வது மிகக் கடினம்.

எனது கணவர் காமினி கொலை செய்யப்படுவார் என நான் எண்ணியிருக்கவில்லை. அவரது கொலை என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அவர் வீட்டைவிட்டு புறப்படும் போது வழமையாக ஆயுதம் தரித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் செல்வார். ஆகவே அவருக்கு ஆபத்து வரும்என நான் கருதியிருக்கவில்லை.

காமினியின் இறுதிச் சடங்கின்போது போக்குவரத்து வசதிகள் செய்யப்படவில்லை. மக்கள் பெருமளவில் வருவதை அரசு விரும்பவில்லைப் போலும். அடுத்து ரூபவாஹினி ஒளிபரப்பும் செய்யாததும் ஒரு குறையாகும்.

இந்தக் கொலைபற்றிய விசாரணையை அரசு நடத்துகிறது அதுபற்றி எமக்கு தெரிய வேண்டும்.

அரசாங்கம் பாதுகாப்பு வழங்கியதாககூறுகிறது அப்படியாயின் நகரில் இருந்த இராணுவ சோதனை நிலையங்கள் ஏன் அகற்றப்பட்டன.

ஏன் அவர்கள் பற்றறிகளை வடபகுதிக்கு கொண்டு செல்ல அனுமதித்தனர்? ஏன் சில பொருட்கள் மீதான தடையை நீக்கினர்? இந்த பொருட்கள் வடபகுதி பொது மக்களை சென்றடைந்திருக்குமென நான் கருதவில்லை.

ஆனால் இந்த கொலைக்கு அரசுதான் பொறுப்பு என்று இப்போது நான் கூறவரவில்லை. எதற்கும் விசாரணை முடியட்டும்.

நான் யாழ்ப்பாண மக்களுக்காக அனுதாபப்படுகிறேன். கடந்த 10 வருடங்களாக அவர்கள் வேதனையை அனுபவிக்கிறார்கள். யாழ்ப்பாணம் இப்போது சின்னாபின்னமாக அழிவுற்ற நிலையிலுள்ளது. உணவு கல்வி எல்லாம் கஷ்டமான நிலையிலுள்ளது. நாட்டின் ஒருபகுதி மக்கள் நன்கு அனுபவிக்கும் போது இன்னொரு பகுதி மக்கள் இப்படித் துன்புறுவதை நான் விரும்பவில்லை. யாழ்ப்பாண மக்கள் நல் வாழ்வுக்கு உரித்துடையவர்களாவர்.

அவர்கள் ஜனநாயக முறையில் தலைவர்களை தெரிவு செய்யவேண்டும் என்றார்.

இதேவேளை அவர் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்; முன்னாள் சபாநாயகர் எம். எச், முகமத், திரு. காமினி திசநாயக்காவின் கொலையை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து செய்த சதி என கூறுவதுபற்றி நான் எதுவும் கூறவிரும்பவில்லை.

ஆனால் இந்தக் கொலையும் ராஜீவ்காந்தியின் கொலையும் ஒரே தன்மையதாக அமைந்திருப்பதாகவும், இந்தக் கொலையை புலிகளே செய்ததாக ராஜீவ்காந்தி கொலை பற்றி விசாரித்த விசாரணை அதிகாரிகள் கூறுகிறார்கள். அரசுக்கும் இதில் தொடர்பு இருப்பதாக கூற என்னிடம் ஆதாரம் இல்லை அதுதான் திரு. முகமதுவின் கருத்து பற்றி ஏதும் கூற நான் விரும்பவில்லை.

இந்தக் கொலையை விடுதலைப்புலிகள்தான் செய்தவர்கள் என நிரூபிக்கப்பட்டால் அவர்களுடனான பேச்சுவார்த்தையை நான் ஆதரிக்கமாட்டேன்.

ஜே.வி.பி.காலத்தில் மக்கள் பீதியுடன் வாழ்ந்தனர். ஆயுதப்படையினர், பொலிசார் ஆகியோரின் குடும்பத்தினர் அச்சுறுத்தப்பட்டனர். அவர்களில் சிலர் கொலையுண்டனர். இதன்போதுதான் பிரதமர் சந்திரிகாவின் கணவரும் கொலையுண்டார். சந்திரிகாவும் நாட்டை விட்டோடி 2 வருடம் வெளியில் இருந்தார். அப்போது பொலிசாரும் படையினரும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டினர். அது அவர்களது கடமை. இறந்த பிள்ளைகளின் பெற்றோருக்காக நான் மனம் வருந்துகிறேன். அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் அவர்களது பிள்ளைகள் செய்ததை பெற்றோர் அறிந்திருக்கமாட்டார்கள். அதற்கு நான் அனுதாபப்படுகிறேன். அதேநேரம் தொடர்ந்து புதைகுழி தோண்டுதலையும் நான் விரும்பவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்,

-கே-சி

## பலதும் பத்தும்

### அழுவது எப்போது;

இலஞ்ச ஊழல் ஒழிப்புச் சட்டம் அண்மையில் நிறைவேற்றப்பட்டதல்லவா? அதன்படி — அரசியல்வாதி இலஞ்சம் பெற்றது கண்டு பிடிக்கப்பட்டால்... அவரது சொத்துப் பறிமுதலாகும்.

அது மாத்திரமல்ல அவர் ஈடு வைத்ததும் பறிமுதலாகும்... இதனால் நேர்மையான அரசியல்வாதியும் தனது சொத்தை ஈடுவைக்கமுடியாத சங்கடநிலை தோன்றியுள்ளதாம்!

''அழக்கொண்ட எல்லாம் அழப்போம்!'' என்கிறார் வள்ளுவர். அதாவது...பிறர் அழும்படியாக வருந்திச் சேர்த்தது தாம் அழும்படியாகப் போய் விடும்!

பொது நிறுவனங்களின் சொத்துச் சேர்த்த சிலர் கனவான்களாக உலா வருகிறார்களாம். அவர்கள் அழுவது எப்போது என்றும் கேள்வி எழுப்புகிறார்கள் சிலர்?

—மயூரன்

## இராசி பலன்

09 - 11 - 1994

புதன்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-23)

ஷஷ்டி காலை 7-22 வரை; உத்தராடம் மாலை 5-09 வரை: அமிர்த சித்தயோகம் இராகுகாலம் நண்பகல் 12-05 முதல் 1-35 வரை சுபநேரம் மாலை 4-35 முதல் 6-05 வரை.

மேடம்: கல்வியில் சிறப்பு, குடும்ப சுகம், பணவரவு

இடபம்: மனத்தாங்கல்-' வசதிக் குறைவு, அலைச்சல்

மிதுனம்: முரண்டுபிடித்தல், தொழில் கஷ்டம்' வேதனை.

கடகம்: உறவினர் வருகை, சுபகாரியம், மன உறுதி

சிங்கம்: காரியச் சிறப்பு, கடித உறவு, பயணநன்மை

கன்னி: கருத்து மோதல், அதிகாரிகள் துயர், மனக் கவலை

துலாம்: விரக்தி நிலை, பண முடை, மானோர் வெறுப்பு

விருச்சிகம்: ஆவேசப் பேச்சு தொழில் லாபம், பிறர் உதவி

தனுசு: குடும்ப பிரிவு, அற்பர் நேசம், கண்டிப்பு

மகரம்: முதன்மை நிலை, பழைய நட்பு, மனக்களிப்பு

கும்பம்: ஒதுங்கிப் போதல், சுப விரயம், தாமத முயற்சி.

மீனம்: எதிர்பாரதது நிகழ்வு, குடும்ப மகிழ்ச்சி, அறிஞர் சந்திப்பு

— ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994—11—09

புதன் இரவு

08-01 குயிலோசை ந. கிருஷ்ண எழுதிய நம் கிராமம் நாளை மீளும்'' கிராமிய நிகழ்வு
08-20 ஏர்முனை ''ஞானம் பிறந்தது'' தனிநடிப்பு
08-30 செய்திகள்
08-40 நாடகம் அளவைக் குமரன் எழுதிய ''காலப் புரிதல்''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1994—11-10

வியாழன் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 விடுதலை கீதங்கள்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**பனையை நாட்டியவர்கள் - இப் பாரினில் உயர்ந்தவர்கள்**


உ

சிவமயம்

சைவ பரிபாலன சபை - யாழ்ப்பாணம்

**சைவசமய தீட்சை**

காலம் :
11 - 11 - 94 வெள்ளிக்கிழமை
நேரம் :
மு. ப. 8-30 மணி
இடம் :
நாவலர் ஆச்சிரம மண்டபம்
( நீராவியடி )


தீட்சாகுரு :
கரணவாய்
சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள்

★ ஏழு வயதுக்கு மேற்பட்ட ஆண் — பெண் இருபாலாரும் தீட்சை பெற்றுக்கொள்ளலாம்.

சைவபரிபாலன சபை.

(சி-1303)


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குழந்தைவேலு தங்கராசா
(பலுகாடு - காரைநகர்)

மலர்வு: 14-02-1949
உதிர்வு: 25-10-1990
திதி : 09-11-1994

உங்களின் நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது.

குடும்பத்தினர்.

51, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1305)

### 2ம் கட்ட ஈழப் போரின் பின்

# சிறிலங்கா கடற்படையினர் 25 கடற்கலங்களை இழந்தனர்

[யாழ்ப்பாணம்]

1990ம் ஆண்டு இரண்டாவது ஈழப் போர் ஆரம்பமானது முதல் இன்று வரை, சிறிலங்கா கடற்படை 25 கடற் கலங்களை இழந்துள்ளது

இவற்றில் 6 நீரூந்து விசைப் படகுகள், விடுதலைப் புலிகளினால் எதுவித சேதமுமின்றிக் கைப்பற்றப்பட்டன. எடிதரா அபிதா ஆகியன உட்பட 3 கட்டளைக் கப்பல்கள் கடற் கரும்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

7 ரோந்துப் படகுகள் கடலில் வைத்துத் தாக்கி அழிக்கப்பட்டன. சாகரவர்த்தனு என்ற பாரிய ரோந்துக் கப்பல் கற்பிட்டிக் கடற்பரப்பில் கரும்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

தென் கொரிய டோரு ஒன்றும், இஸ்ரேலிய சுப்பர்டோரு ஒன்றும் யாழ்ப்பாணக் கடற் பகுதியில் கடற்புலிகளாலும், கடற்கரும்புலிகளாலும் தாக்கி மூழ்கடிக்கப்பட்டன.

4 நீரூந்துப் படகுகள் யாழ். கடல் நீரேரியில் வைத்துக் கடலில் மூழ்கடிக்கப்பட்டன.

காங்கேசன்துறைத் துறை முகத்தில் வைத்துக் கட்டளைக் கப்பல் ஒன்று கடற் கரும்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட சமயம், வழிகாட்டும் சிறிய கப்பலான ட்ரக் ஒன்றும் அழிக்கப்பட்டது. ஓஷன்ரேடர் என்ற படையினருக்கான விநியோகங்களை மேற்கொண்ட கப்பல் அண்மையில் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

கடற்படையின் மற்றொரு தரையிறக்கும் கப்பலான கண்டுல, 1992ல் கற்பிட்டிக் கடலில் புயலினால் மூழ்கி மீண்டும் பயன்படுத்தமுடியாத அளவுக்குச் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. (ரி)

### ★ 1981 யூலை வேலை நிறுத்தத்தில் பாதிக்கப்பட்ட

# 60 வயதுக்கு உட்பட்டவர்கள்

## மீண்டும் வேலைக்கு அமர்த்தப்படுவர்

(கொழும்பு)

1981ம் ஆண்டு யூலை வேலை நிறுத்தத்தில், வேலையை இழந்தவர்களில் 60 வயதிற்கு உட்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாகப் பிரதி அமைச்சர் அத்தாவுட செனிவரத்ன விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் 60 வயதைப் பூர்த்தி செய்துள்ள நபர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற தினம் வரையிலான காலப் பகுதியைக் கவனத்தில் எடுத்து வருடாந்தச் சம்பள உயர்வு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வூதியர்களுக்கான 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி 1988ம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கென 4 தவணைகளில் வழங்கப்பட உள்ளது. [கே-ரி[

# கடலில் தத்தளித்த இலங்கையர் மீட்பு

(ஸ்ரோக்ஹோம்)

சுவீடனில் சட்டவிரோதமாக குடியேறும் நோக்குடன் போல்ரிக் கடலில் படகுகளில் தத்தளித்த இலங்கையரையும் ஈராக்கியரையும் சுவீடனின் கரையோரப் பாதுகாப்பு படகுகள், ஹெலிகொப்டர்கள், கரையேற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ரஷ்யாவிலிருந்தும் போல்ரிம் நாடுகளிலிருந்தும் சுவீடன் சென்றிருக்கவேண்டும், இன்னும் பலர் சுவீடனுக்கு செல்வதற்காக ரஷ்யாவில் காத்திருப்பதாகவும் அறியப்படுகிறது. (கே-ரி)

# மாவீரர்நாள், ஒளிவீச்சு ஒளிநாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ஒளிவீச்சின் செப்டெம்பர் மாத ஒளிநாடா வெளிவந்துவிட்டது.

கற்பிட்டிக் கடற்பரப்பில் சாகரவர்த்தனு யுத்தக் கப்பல் மீதான கடற் கரும்புலிகளின் வெற்றிகரத் தாக்குதல், சமாதானத்தின் சமிக்கையாக, நிபந்தனைகள் அற்ற முறையில் விடுதலைப் புலிகளால் 10 யுத்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை, நீங்காத நினைவுகளாக லெப். கேணல் திலீபன், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றோடு வழமையான சிறப்பு அம்சங்களும் அடங்கியுள்ளன.

நிதர்சனம் நிறுவனத்தின் மற்றுமொரு வெளியீடாக மாவீரர்நாள்-1993 ஒளிநாடா நெஞ்சை விட்டகலா நிகழ்வுகளின் ஆவணத் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

இவ்விரு ஒளிநாடாக்களும் இன்று பிற்பகல் 5-00மணிக்கு யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது. அனைவருக்கும் அனுமதி இலவசம்.

# இன்று உதயகீதங்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழிசைக் கவிஞர் சங்கீத பூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தியின் 'உதய கீதங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப. 3மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு விழாவில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டுவைக்க, நூல்மதிப்பீட்டுரைகளை இசைவாருதி ந. வீரமணிஐயர் சாவகச்சேரி கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம், சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் திரு. மு. நாகேந்திரராசா, ஆசிரியர் ச. மார்க்கண்டு ஆகியோர் நிகழ்த்துவார்கள் நூலாசிரியர் திரு. அ. கி. ஏரம்பமூர்த்தி பதிலுரை நிகழ்த்துவார். இவ்வைபவத்தில் சிவசக்தி சங்கீத நர்த்தனாலயத்தினரால் உதயகீதங்கள் பாடல்கள் இசைநிகழ்ச்சியாகஇசைக்கப்படும். -சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 09-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது;

**Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B;**

### உரிய நேரத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் இருக்கவில்லை. நாட்டில் இப்படியான பிரச்னைதோன்றியிருக்கவுமில்லை.

நாம் நாட்டை பிரிப்பதற்கான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. நாட்டை ஒருமைப்படுத்தவே நாம் இப்போது நடவடிக்கை எடுத்துவருகிறோம். அதன் அடிப்படையிலேயே அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம்.

பேச்சுவார்த்தைகள் மூலம் விடுதலைப் புலிகள் தமக்குக் கிடைக்கும் காலத்தைக் கொண்டு தம்மைப்பலப்படுத்திக் கொள்வார்கள் என்று கூறுவோர் அரசியல் லாபம் கருதியே அவ்வாறு கூறுகின்றனர்.

தேர்தல் காலத்தில் தேர்தல் நன்மைகள் கருதியே எதிர்த்தரப்பினர் இப்படியான கருத்தைத் தெரிவிக்கின்றனர். என நான் கருதுகிறேன்.

கடந்த காலத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் 14 மாதங்கள் இரகசியப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் யார் பயன் பெற்றனர்.?.

நாம் இவற்றை அவதானத்தில் எடுத்துள்ளோம். இது போன்ற தவறுகள் ஏற்படாமல் இருக்கும் விதத்தில் நாம் விழிப்பாக இருந்துவருகிறோம்.

புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் ஏற்படாது புலிகள் தான் பலம் பெறுவார்கள் என ஐ. தே. க.வினர் கூறுவது வெறும் அரசியல் லாபத்துக்காகவே.

வடக்கிலுள்ள பொதுமக்களின் நன்மை கருதி அவர்களது அன்றாடத் தேவைக்குரிய பொருட்களையே நாம் வடபகுதிக்கு அனுப்ப அனுமதி வழங்கினோம்.

பாதுகாப்புப்படையினருடன் ஆலோசனை நடத்தியபின் அவர்களின் அனுமதியின் பேரிலேயே இந்த பொருட்களையும் நாம் அங்கு அனுப்பி வைத்தோம்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நூற்றுக்கும் மேற்பட்ட படை அதிகாரிகளை அழைத்து சமாதானப்பேச்சு வார்த்தை நடத்துவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

சமாதான முயற்சிகளை படையினர் எதிர்க்கவில்லை. நாட்டில் சமாதானம் அவசியம் என அவர்கள் வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிகூட சமாதானத்துக்கு எதிராக இருக்கவில்லை காலஞ்சென்ற எதிர்க்கட்சித் தலைவரான காமினி திஸாநாயக்காகூட என்னையும் பிரதமரையும் நேரில் சந்தித்து எமது சமாதான முயற்சிகள் குறித்து மகிழ்ச்சியும், திருப்தியும் தெரிவித்தது மாத்திரமல்லாமல், அதற்கு தம்மாலான ஒத்துழைப்பையும் தருவதாகக் கூறினர். [இ-ரி]

### பௌத்த

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வார்த்தைகளை மேற்கொள்ளவும் இந்தக்குழு திட்டமிட்டுள்ளது.

பௌத்த பிக்குமார் பங்கு பற்றும் சமாதான பாதயாத்திரை ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கும் தேசிய பௌத்த சமாதான இயக்கம் திட்டமிட்டுள்ளது.

அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடனே இந்த பௌத்த சமாதானக்குழுவினர் யாழ். வரத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இ ரி

### வடமராட்சி

[1ம் பக்கத் தொடர்ச்சி[

புக்களை நோக்கு குண்டு வீச்சு விமானங்கள் அகோர தாக்குதலை மேற்கொண்டன.

கட்டைக்காடு - வெற்றிலைக் கேணி இராணுவ முகாமிலிருந்து விடியும் வரை தொடர்ச்சியான ஷெல்வீச்சு இடம் பெற்றது.

உடுத்துறை, தாளையடி, வேம்படிப்பகுதி குடியிருப்புகள் மீது கடும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு பொம்மர் விமானங்கள், ஒரு அவ்ரோ, ஹெலிகொப்டர்கள் போன்றவற்றிலிருந்து குடியிருப்புக்கள் நோக்கி கடும்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களை அடுத்து உடுத்துறை. வத்திராயன், மருதன்கேணி மக்கள் நேற்று பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்றனர்.

இராணுவ முகாமிலிருந்து பரா வெளிச்சம் முகாமை அண்டியபகுதிகளில் ஏவப்பட்டன. 163-சி

### கரும்புலி

[1ம் பக்கத் தொடர்ச்சி[

பல் - லாண்டிங்கிறுப் ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது. இத்தாக்குதலில் படையினர் தரப்பிலும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது.

இக்கப்பல் வெற்றிலைக்கேணி இராணுவமுகாமிற்கு ஆயுத தளபாடங்களை கரையோரத்தில்வைத்து இறக்கிக்கொண்டிருக்கும் போதே நேற்று அதிகாலை 12-26 மணிக்குத் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இக்கப்பலானது கரையில் பொருட்களை இறக்கிக்கொண்டிருந்தபோது தாக்கப்பட்டமையினால் கப்பல் பலத்த சேதமடைந்தபோதும் நீரினுள் அமிழும் சாத்தியம் குறைவாக உள்ளதெனதெரிவிக்கப்படுகிறது.

இத்தரையிறக்கும் போர்க் கப்பலுக்கு காவல் காத்து நின்ற டோரு படகுகள் மீது கடற்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடற்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத டோரு படகுகள் விரைந்தோடியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில் நான்கு படையினர் காயமடைந்துள்ளதாக அரசு தரப்பு செய்திகள் தெரிவித்தன. (ரி)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், தீவகக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் உள்ள மாணவர் அமைப்பு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 4-00 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்வுள்ளது.

இக் கலந்துரையாடலில் வலிகாமம் தீவகக் கோட்ட மாணவர் அமைப்பு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர். - ரி

### அம்பாறை

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

படையினர் பிடித்து பலமாகத் தாக்கிய பின்னர் சுட்டுக் கொன்றனர்.

ஆலையடிவேம்பைச் சேர்ந்தவர்களானகார்த்திகேசு கருணாகரன் (25 வயது), சின்னவன் (28 வயது) ஆகிய இரண்டு மீனவர்களுமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர். ரி

### காமினி கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யம் பதில் கடிதத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கு நேற்று அனுப்பி வைத்தது.

இந்திய அரசங்கம் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை முக்கிய கவனத்திற்கு எடுத்துக் கொண்டிருப்பதாகவும் கூடிய விரைவில் இந்த விவகாரம் தொடர்பாக எவ்வாறு உதவலாம் என்பதனை உயர்ஸ்தானிகர் அமைச்சருக்கு அறிவிக்க விருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது, -ரி

### மூன்றுவது

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

22 மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கும் 9,580 வயக்குச் சாவடிகளில் வாக்களிப்பு நடைபெறும்.

வாக்குகளை எண்ணும் வேலை மாவட்டங்களின் பிரதான நகர்களில் 1,080 நிலைகளில் இடம்பெறும்.

50 ஆயிரம் பொலிசார் தேர் தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். வாக்குச் சாவடிகள் மற்றும் தேர்தல் நடைபெறும் இடங்களில் இவர்கள் பாதுகாப்புபு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொதுசன ஐக்கிய முன்னணி சார்பில் பிரதமர் சந்திரிகா, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் திருமதி சிறிமா திசநாயக்கா, பூமிபுத்திர கட்சி சார்பில் ஹரிச்சந்திர விஜேதுங்க, சுயேட்சையாக ஏ. ஜே, ரணசிங்க, ஹட்சன் சமரசிங்க ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

வாக்குகள் எண்ணப்படும் வேலைகள் இன்று மாலை அரம்பிக்கப்படும். முடிவுகள் இன்று நள்ளிரவு முதல் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ரி)

### அமைதிப்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

வாக்குகள் கிடைக்கும் சந்தர்ப்பம் உள்ளதாக மேலும் 'வெரித்தாஸ்' நேற்றைய செய்தியில் தெரிவித்தது.

இதேவேளை திருமதி சிறிமா திசநாயக்கா, தமிழர்களிடையேயும் சிங்களவர்களிடையேயும் இனவாதத்தை தூண்டிவிடும் செயலில் இறங்கியிருப்பதாக திருமதி சந்திரிகா குமாரணதுங்கா குற்றம்சாட்டியுள்ளார். மேலும் இன்றைய ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்தித் தலைவர் காமினி திசநாயக்காவின் கொலைக்கு பின்பு ஐ.தே க. வேட்பாளராக போட்டியிடும் திருமதி சிறிமா திசநாயக்காவுக்கு அனுதாப வகக்குகள் கிடைக்கும் என ஐ, தே. க. எதிர்பார்க்கின்றனர். -கே.ரி